Starting of a Co-operative Milk Producers Union at Sarukkai Village.

* Q. No. 647—Thiru. S. RAJARAMAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any representation has been received from milkmen of Sarukkai Village in Papanasam Taluk in Tanjore Distric by the Office of the Milk Deputy Commissioner contonment Tiruchirappalli during July 1980 for starting a Co-operative Producers Union : and

(b) the action taken in this regard ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சருக்கை கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 15—9—1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் நவீன முறையில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம்,

* வினா எண் 702—திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நவீனமுறையில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திறனைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் பட்டு வளர்ப்பினை பெருக்குவதற்கு என்று தனியாக திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தமிழ் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நவீன பட்டு வளர்ப்புத் திட்டங்கள் இப்பகுதியிலும் அமுல் படுத்தப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டு வளர்ச்சி பயிற்சி கிடைக்க காஞ்சிபுரத்தில் ஒரு முன்னோடி மற்றும் சேவை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூசசி வளர்ப்புத் திறனை அதிகப்படுத்த, அதற்குப் புதிய முறைகளை அறிந்து செயல்படுத்த, தேர்ச்சி பெற்ற விவசாயிகள் ஜப்பான் நாட்டுக்குப் பயிற்சி பெற்று வர அனுப்பப்படுவார்களா? மேலும் ஜப்பான் நாட்டிலேயிருந்து, பட்டுப்பூச்சி வளர்ப்பிலே தேர்ச்சிப்பெற்ற விஞ்ஞானிகள் வரவழைக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மோண்புமிகு பேரவைத் தவைலர் அவர்கேள, இங்கேயே விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், பட்டு வளர்ப்பு துறையின் சார்பாக, சில அதிகாரிகளை ஜப்பான் நாட்டிற்கு பிவோல்ட்டின் என்ற பட்டு வளர்ப்பு முறையினைத் தெரிந்து கொள்ள அனுப்பி அவர்கள் பயிற்சி பெற்று வந்து, இன்றைக்கு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பிலும், பட்டு வளர்ப்பிலும் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையிலே, ஊசிப் பூச்சி களால் பாதிப்பு ஏற்படுகிறது, அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டம் எற்கனவே காஞ்சிபுரத்திலும் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆரம்பிக்கப் பட்டு, அது இடைக் காலத்தில் தடைப்பட்டது. அப்படி இடைக் காலத்தில் தடைப்பட்ட பிறகு, தொடர்ந்து நடைபெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்தைக் காஞ்சிபுரத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு முனையுமா ? அதற்கு ஏதேனும் மானியமும், கடன்களும், உதவி களும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் தொடர்ந்து வேகமாக நடத்தப்படும். இந்த ஆண்டு கூட ஏறத்தாழ ரூ. 3 கோடி தமிழ்நாட்டிற்கு என்று பட்டு வளர்ப் புக்காக ஒதுக்கப்பட்டு, மிக வேகமாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு அந்தத் தொழிற்கூடங்களில் பணி புரியக் கூடிய அந்தத் தொழி லாளர் பெண்கள் குறிப்பாக, 10 மணி நேரம் வேலை செய்தால் கூட அவர்களுக்கு ரூ. 3, ரூ. $3\frac{1}{2}$ தான் கொடுக்கப்படுகிறது. இதை மாற்றி, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சக் கூலியை அவர்களுக்குக் கொடுக்க அமைச்சர் ஆணையிடுவாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் மூலமாகத் தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 703—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் பால் பண்ணையொன்று அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டுறவு பால் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றையெல்லாம் பயன் படுத்தி ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் நாள் தோறும் 10 டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை இப்பொழுது நடந்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக சேலத்திலும் கிருஷ்ணகிரியிலும் இரண்டு பால் பவுடர் தொழிற்சாலைகள் தொடங்க இருக்கிறோம். அதற்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் மற்ற மாவட்டங்களில் தொடங்குவது பற்றி அரசு ஆய்வு செய்யும்.